# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 17

1) தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆகிய மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தை சேர்ந்தவை என்ற கருத்தை முன் வைத்தவர்?

A) குமரிலபட்டர் B) ஈராஸ் பாரதியார்

C) ஹோக்கன் D) பிரான்சிஸ் எல்லிஸ்

2) இவற்றுள் எது தென் திராவிட மொழி?

A) கொரகா B) கோண்டா

C) கோயா D) கோண்டி

3) "இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்" என்று கூறும் இலக்கண நூல்?

A) தொல்காப்பியம் B) சேந்தன் திவாகரம்

C) பிங்கல நிகண்டு D) தண்டி அலங்காரம்

4) புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக தமிழ் எத்தனை வண்ணங்களைக் கொண்டுள்ளது?

A) பத்து B) நூறு

C) ஐம்பது D) ஒன்பது

5) தூது இலக்கியத்தின் பா வகை?

A) நேரிசை வெண்பா B) இன்னிசை சிந்தியல் வெண்பா

C) வஞ்சிப்பா D) கலி வெண்பா

6) அன்பரசன் நல்ல பையன் - இத்தொடரில் நல்ல என்பது?

A) வினையடை B) பெயரடை

C) பெயர்ப்பயனிலை D) வினைப்பயனிலை

7) அண்ணனோடு வருவான் -என்பது எவ்வகை தொடர்?

A) எழுவாய்த்தொடர் B) தெரிநிலை பெயரெச்சத்தொடர்

C) வேற்றுமைத்தொடர் D) விளித்தொடர்

8) Morpheme என்ற ஆங்கிலச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்லை தேர்க.

A) ஒலியன் B) புற அமைப்பு

C) உள்ளமைப்பு D) உருபன்

9) திடலில் மிதி வண்டியை ஓட்டினேன் என்பது எவ்வகை வினை?

A) தன் வினை B) பிற வினை

C) காரண வினை D) செயப்பாட்டு வினை

10) குளிர்த்தல் என்பதே குளித்தல் என்றாயிற்று என்று விளக்கம் தந்தவர்?

A) தொ. பரமசிவன் B) ந.மு. வேங்கடசாமி நாட்டார்

C) பண்டிதமணி கதிரேச செட்டியார் D) வில்லியம் ஜோன்ஸ்

11) கந்தம் என்ற சொல்லின் பொருள் யாது?

A) மணம் B) கவலை

C) வேல் D) மேல்

12) மாதவி காவியத்தை இயற்றியவர் யார்?

A) ஈரோடு தமிழன்பன் B) தமிழ் ஒளி

C) அப்துல் ரகுமான் D) ஆலந்தூர் கோ.மோகன ரங்கன்

13) சலத்தால் பொருள் செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ அற்று. - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி எது?

A) உருவக அணி B) ஏகதேச உருவக அணி

C) எடுத்துக்காட்டு உவமை அணி D) உவமை அணி

14) செருக்கினால் துன்பம் தந்தவரை எதனால் வெல்ல வேண்டும்?

A) அறிவு B) செல்வம்

C) வீரம் D) பொறுமை

15) தமிழில் எழுதப்பட்ட உலகப்பனுவல் எது?

A) தேவாரம் B) தமிழ் மூவாயிரம்

C) நாலாயிர திவ்விய பிரபந்தம் D) திருக்குறள்

16) உலகில் முதன் முதலில் இணைய வழி மளிகைக்கடை எந்த நாட்டில் தொடங்கப்பட்டது?

A) இத்தாலி B) ஜெர்மனி

C) அமெரிக்கா D) இங்கிலாந்து

17) "அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்" என்று கூறியவர் யார்?

A) ஈரோடு தமிழன்பன் B) தமிழ் ஒளி

C) அப்துல் ரகுமான் D) வைர முத்து

18) நண்டு எத்தனை அறிவுடைய உயிரிக்கு எடுத்துக்காட்டு?

A) மூன்றறிவு B) நான்கறிவு

C) ஐந்தறிவு D) இரண்டறிவு

19) தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் எது?

A) அகத்தியம் B) தண்டி அலங்காரம்

C) தொல்காப்பியம் D) பிங்கல நிகண்டு

20) இஸ்ரோ வின் தலைவர் பதவி ஏற்ற முதல் தமிழர் யார்?

A) அப்துல் கலாம் B) மயில்சாமி அண்ணாதுரை

C) சிவன் D) வளர்மதி

21) யவனப்பிரியா என்று அழைக்கப்படும் பொருள் எது?

A) நெல் B) மஞ்சள்

C) மிளகாய் D) மிளகு

22) அரேபியர் வணிகம் செய்த இடம் எவ்வாறு அழைக்கப்பட்டது?

A) கடை வீதி B) பந்தர்

C) சந்தை D) வணிக வீதி

23) "நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்" என்ற அடிகள் இடம் பெற்ற நூல் எது?

A) பதிற்றுப்பத்து B) பரிபாடல்

C) புறநானூறு D) அகநானூறு

24) தொன்மக் கருத்துகளின் அடிப்படையில் எழுதாமல் மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தும் இலக்கியம் எது?

A) சங்க இலக்கியங்கள் B) தொல்காப்பியம்

C) சிலப்பதிகாரம் D) மணிமேகலை

25) பரிதிமாற்கலைஞர் கீழ்க்கண்ட எந்த நூலுக்கு உரை எழுதியுள்ளார்?

A) மூதுரை B) தமிழ் விடு தூது

C) நீதிநெறி விளக்கம் D) மதுரைக்கலம்பகம்

26) 85 என்ற எண்ணுக்கு இணையான தமிழ் எண்ணை தேர்க.

A) அரு B) ருஅ

C) உரு D) கரு

27) " தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்துஎன் ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்று வள்ளலார் யாருடைய பாடலை சுவைக்கிறார்?

A) அப்பர் B) சுந்தரர்

C) மாணிக்கவாசகர் D) சேக்கிழார்

28) "இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி"- இவ்வடியில் மடமொழி என்று குறிப்பிடப்படுபவர் யார்?

A) பாஞ்சாலி B) கண்ணகி

C) கோப்பெருந்தேவி D) சீதை

29) "தமிழொளியை மாதங்களிலே சாய்க்காமை வேண்டும் இலவச நூற்கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்" என்று பாடல் எழுதியவர் யார்?

A) வைர முத்து B) வாணி தாசன்

C) பாரதிதாசன் D) தாராபாரதி

30) "பெண்கள் கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படா" என்று உறுதியாக எடுத்துரைத்தவர்?

A) பாரதிதாசன் B) அம்பேத்கர்

C) பெரியார் D) பாரதியார்

31) "செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே" என்று கூறும் இலக்கண நூல் எது?

A) தொல்காப்பியம் B) நன்னூல்

C) தண்டி அலங்காரம் D) மாறன் அலங்காரம்

32) மெல்லப்பேசினான் என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.

A) குறிப்பு வினையெச்சம் B) முற்றெச்சம்

C) தெரிநிலை வினையெச்சம் D) குறிப்பு பெயரெச்சம்

33) ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம் எதற்கு ஒப்பாக கூறப்படுகிறது?

A) புதரில் விதைத்த விதை

B) கடலில் கரைத்த பெருங்காயம் போன்றது

C) எலியும் பூனையும் போல

D) கயிறு திரித்தல் போன்றது

34) "மாலுமி இல்லாத கட்டுமரம் போல" என்ற உவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளை தேர்க.

A) ஓடுதல் B) மூழ்குதல்

C) துன்பப்படுதல் D) அழிதல்

35) பொருந்தச்சொல்லைக் கண்டறிக.

A) பாணன், பாடினி

B) ஆயர், ஆய்ச்சியர்

C) பரதர், உழைத்தி

D) குறவர், குறத்தி

36) "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்

பூவோடு புரையுஞ் சீரூர் பூவில்" என்று பரிபாடல் வரிகள் கூறுவது போலவே இன்றும் கோவிலும் தெருக்களும் எங்கு காணப்படுகின்றன?

A) கும்பகோணம் B) மதுரை

C) காஞ்சி D) மாமல்லபுரம்

37) முட்டு என்பதன் பொருள் யாது?

A) குவியல் B) நெற்றி

C) மழை D) நலம்

38) சுவாமிநாத தேசிகர் யாரிடம் கல்வி பெற்றார்?

A) ஈசான தேசிகர் B) மயிலேறும் பெருமாள்

C) தாண்டவ மூர்த்தி D) மகாலிங்கம்

39) " நீ தந்த நீர் இது; நீ தந்த சீர் இது;

நீ தந்த ஒளியும் இஃதே" என்ற வரிகள் இடம் பெற்ற கவிதை எது?

A) பொங்கல் வழிபாடு B) உழவின் சிறப்பு

C) சச்சிதானந்தன் D) முடியரசன்

40) பறம்பு மலையில் நடந்த விழாவில் முடியரசனுக்கு கவியரசு பட்டம் வழங்கியவர் யார்?

A) குன்றக்குடி அடிகளார் B) மறைமலை அடிகள்

C) திரு.வி.க D) மு.வரதராசனார்

41) மல்லிகைப்பூ என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.

A) அன்மொழித்தொகை B) இருபெயரொட்டு பண்புத்தொகை

C) குறிப்பு பெயரெச்சம் D) ஏழாம் வேற்றுமைத்தொகை

42) ஜி.யூ.போப் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிக்கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதிய ஏடு எது?

A) நியூ இந்தியா B) இந்தியன் சஞ்சிகை

C) இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு D) B) மற்றும் C)

43) அஞ்சலையம்மாள் எந்த இயக்கத்தில் கலந்துகொண்டு தமது பொது வாழ்க்கையை தொடங்கினார்?

A) சுதேசி இயக்கம் B) உப்புச் சத்தியாகிரகம்

C) ஒத்துழையாமை இயக்கம் D) சட்ட மறுப்பு இயக்கம்

44) வை.மு.கோதை நாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி முதலியவர்களோடு நட்பு கொண்டு பெண்ணடிமைக்கு எதிராக குரல் கொடுத்தவர்?

A) அம்புஜத்தம்மாள் B) அசலாம்பிகை அம்மையார்

C) அஞ்சலையம்மாள் D) முத்துலட்சுமி ரெட்டி

45) பகுத்தறிவுக்கவிராயர் வாழ்ந்த காலம்?

A) 25.09.1899 - 23.05.1981 B) 22.07.1915 - 07.08.1974

C) 07.10.1920 - 03.12.1998 D) 07.02.1902 - 15.01.1981

46) " புண்சுமந்தோம் நந்தி புடைத்தென்னார் புண்ணியனார்

மண்சுமந்தார் என்றுரு குவார்." இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?

A) பெரிய புராணம் B) திருவிளையாடற்புராணம்

C) தேவாரம் D) திருவாரூர் நான்மணி மாலை

47) "நற்பெயர் எடுத்திட வேண்டும்! நாளும்

நன்றாக படித்து நீ முன்னேற வேண்டும்!" என்ற வரிகளின் படைப்பாளி?

A) தாரா பாரதி B) முடியரசன்

C) வாணிதாசன் D) கண்ணதாசன்

48) கரியமால் கோவில் இடம்பெற்றுள்ள நகரம்?

A) மதுரை B) சென்னை

C) திருநெல்வேலி D) தஞ்சாவூர்

49) 'அகனமர்ந்து ஈதலின் நன்றே' என்ற தொடரில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு இலக்கணக்குறிப்பு தருக.

A) கடைப்போலி B) முதற்போலி

C) இடைப்போலி D) அகம் என்பதன் மரூஉ

50) 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று பரிதிமாற்கலைஞரால் பாராட்டப்பட்டவர்?

A) திருவாவடுதுறை ஆதீனத்தார் B) ஆறுமுக நாவலர்

C) மீனாட்சி சுந்தரனார் D) திரு.வி.க

51) "கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு: நானோர் தும்பி!" என்று தமிழ்க்காதல் கொண்டவர்?

A) பாரதிதாசன் B) பாரதியார்

C) அப்துல் ரகுமான் D) ஈரோடு தமிழன்பன்

52) யாருடைய பாடல்களில் கம்பனின் மிடுக்கையும் பாரதியின் சினப்போக்கையும் ஒருமித்து காணலாம்?

A) தமிழொளி B) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

winmeen.com

C) இராமலிங்கனார் D) சச்சிதானந்தன்

53) பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் என்னும் கவிதை நாடகக் காப்பியத்தை வெளியிட்ட ஆண்டு?

A) 1899 B) 1892

C) 1891 D) 1894

54) பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய நாடகங்கள்?

A) குறவஞ்சி நாடகம் B) பள்ளு நாடகம்

C) ஓரங்க நாடகம் D) நொண்டி நாடகம்

55) திசம்பர் என்ற சொல்லின் இலக்கணக்குறிப்பு தருக.

A) சினையாகுபெயர் B) இருபெயரொட்டுப்பண்புத்தகை

C) காலவாகுபெயர் D) இடவாகுபெயர்

56) கமலா சிரித்தாய் என்பது என்ன வழு?

A) பால்வழு B) இடவழு

C) காலவழு D) மரபு வழு

57) பாசவலை என்பதன் பொருள்?

A) மாயவலை B) ஒருவகை நோய்

C) முழுமை பெறாத பாடல் D) இலக்கணப்பிழை

58) "மாதவி வேலிப் பூக வனந்தொறும் வயல்கள் தோறும்

ஓதிய உடம்பு தோறும் உயிரென உலாய தன்றே." -இப்பாடல் அடிகள் இடம்பெற்ற நூல்?

A) பெரிய புராணம் B) நாலாயிர திவ்வியபிரபந்தம்

C) நந்திக்கலம்பகம் D) கம்பராமாயணம்

59) சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் எத்தனை காட்சியகங்கள் உள்ளன?

A) 12 B) 10

C) 8 D) 13

60) "புகழெனின் உயிரும் கொடுக்குவர்

பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" என்ற அடிகள் இடம் பெற்ற நூல்?

A) அகநானூறு B) நற்றிணை

C) பட்டினப்பாலை D) புறநானூறு

61) நன்னூலுக்கு காண்டிகையுரை கண்டவர்?

A) இராமச்சந்திரக்கவிராயர் B) ஆறுமுக நாவலர்

C) இராமானுசக்கவிராயர் D) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

62) பறப்பதனைவிட நிலத்தில் நடப்பதனையே மிகவும் விரும்பும் பறவை எது?

A) காகம் B) மயில்

C) மரகதப்புறா D) மைனா

63) யாரால் இவ்வுலகம் அழிந்து போகாமல் நிலைபெற்றிருக்கிறது?

A) பொறுமையுடையவர்கள் B) நன்றி மறவாதவர்கள்

C) பயன் கருதாது உதவுபவர் D) பண்புடையவர்கள்

64) "நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்

நேர்உறக் கண்டுளந் துடித்தேன்" என்பது யார் கூற்று?

A) தாயுமானவர் B) மாணிக்கவாசகர்

C) வள்ளலார் D) அருணகிரி நாதர்

65) "திங்களை பாம்பு கொண்டற்று" - என்று அறிவியல் செய்தி கூறும் இலக்கியம் எது?

A) திருக்குறள் B) புறநானூறு

C) திருவாசகம் D) தொல்காப்பியம்

66) கலிலியோ எதைப் படிப்பதில் தமக்கிருக்கும் விருப்பத்தை தந்தையாரிடம் தெரிவித்தார்?

A) அறிவியல் B) வானியல்

C) மருத்துவம் D) இசை

67) தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரிடம் நெருங்கிப்பழகியவர் யார்?

A) வாணிதாசன் B) உடுமலை நாராயண கவி

C) மருதகாசி D) முடியரசன்

68) 'தனிக்குறில் முன் உயிர் வரின் இரட்டும்' என்னும் நூற்பாவின்படி புணர்ந்துள்ளதை தேர்க.

A) பலாச்சுளை B) நூலாடை

C) மாவிலை D) கண்ணழகு

69) நீலாம்பிகை யாருடைய மகள் ஆவார்?

A) குன்றக்குடி அடிகளார் B) மறைமலையடிகளார்

C) கிருபானந்தவாரியார் D) உ.வே.சா

70) குமர குருபரர் பிறந்த ஊர் எது?

A) செங்கப்படுத்தான் காடு B) திருவெண்காடு

C) திருவைகுண்டம் D) திருப்பனந்தாள்

71) "நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ" இப்பாடலில் எப்பாவகை வந்துள்ளது?

A) கலிப்பா B) வஞ்சிப்பா

C) ஆசிரியப்பா D) நேரிசை வெண்பா

72) சீறாப்புராணத்தில் உள்ள விருத்தப்பாக்களின் எண்ணிக்கை?

A) 5027 B) 3615

C) 3363 D) 5047

73) மாலை வாங்கி வா என்று கூறும் இலக்கியம் எது?

A) பள்ளு B) தூது

C) குறவஞ்சி D) பிள்ளைத்தமிழ்

74) தமிழ்நாட்டு பெர்னாட்ஷா என்று அழைக்கப்படுபவர் யார்?

A) திரு.வி.க B) மு.வரதராசனார்

C) பெருஞ்சித்திரனார் D) அறிஞர் அண்ணா

75) மாங்குடி மருதநாரை ஆதரித்தவர்?

A) குமணன் B) பாரி

C) நன்னன் D) நெடுஞ்செழியன்

76) இறைவனை ஆடல் கண்டருளிய அணங்கு எது?

A) துர்க்கை B) பிடாரி

C) காளி D) சூலி

77) போற்றுதல் என்பது?

A) பெருமை அறிந்து ஒழுகல் B) சுற்றத்தாரைக் கோபிக்காமை

C) அன்பால் சேர்ந்தவரைப் பிரியாமை D) அறிவில்லார் பேச்சைப்பொறுத்தல்

78) முதன் முதலாக நூல்நிலையம் அமைத்தவர்கள்?

A) இத்தாலியர்கள் B) ஆங்கிலேயர்கள்

C) அமெரிக்கர்கள் D) கிரேக்கர்கள்

79) உங்களுடைய தருமமும் கருமமும் உங்களைக்காக்கும் என்று கூறியவர்?

A) அயோத்திதாசப்பண்டிதர் B) வள்ளலார்

C) அம்பேத்கர் D) கவிமணி

80) காமராசர் ஆட்சிக்காலத்தில் கல்வி அமைச்சராய் இருந்தவர்?

A) ஆர். வெங்கட்ராமன் B) சி.சுப்பிரமணியன்

C) மு. ஏழுமலை D) ந.மணிவண்ணன்

81) கொத்துக்கறி என்ற சொல்லை பிரித்து எழுதுக.

A) கொத்து+கறி B) கொந்து+கறி

C) கொண்டு+கறி D) கோதி + கறி

82) ஞாயிறு என்ற சொல்லின் எதிர்ச்சொல் தருக.

A) இருள் B) நீர்

C) ஞாலம் D) திங்கள்

83) வழூஉச்சொல் நீக்கி எழுதுக.

A) அலமேலு B) அலர்மேல்

C) அலகுமேழ் D) அளர்மேல்

84) தவறாக பொருந்தியுள்ள இணையைத் தேர்க.

A) குருகு - நாரை

B) உரி - பண்டம் வைக்க உதவும் தொங்கு கயிறு

C) இரை - ஒலி

D) உறை - நீர்த்துளி

85) பொதி என்ற சொல்லின் எதிர்மறை வினையெச்சம்?

A) பொதியாமை B) பொதியாத

C) பொதியாது D) பொதியான்

86) கயல்விழி வந்தாள் இலக்கணக்குறிப்பு தருக.

A) அன்மொழித்தொகை B) இருபெயரொட்டுப்பண்புத்தொகை

C) எழுவாய் வேற்றுமை D) மூன்றாம் வேற்றுமை

87) ஒரு பெயர்ச்சொல்லை வினைச்சொல்லாக மாற்ற அளபெடுப்பது?

A) இன்னிசையளபெடை B) செய்யுளிசையளபெடை

C) சொல்லிசையளபெடை D) ஒற்றளபெடை

88) எதற்கும் அஞ்சாமல் ஏறுபோல் நடக்க வேண்டும் - விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு.

A) ஏறு என்ன செய்தது? B) என்ன செய்ய வேண்டும்?

C) எப்படி நடக்க வேண்டும்? D) எப்படி எதுபோல் நடக்க வேண்டும்?

89) இறைவா நீ எனக்கு அருளாகவே - எவ்வகைத்தொடர்?

A) பிறவினைத்தொடர் B) உடன்பாட்டுத்தொடர்

C) செய்வினைத்தொடர் D) வியங்கோள் தொடர்

90) "வானூர் மதியம் போல் வைகலும் தேயுமே

தானே சிறியோர் தொடர்பு." இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?

A) நான்மணிக்கடிகை B) நாலடியார்

C) முதுமொழிக்காஞ்சி D) மூதுரை

91) ஐந்திணை எழுபது என்ற நூலின் ஆசிரியர் யார்?

A) மூவாதியார் B) மாறன் பொறையனார்

C) பொய்கையார் D) கண்ணன் சேந்தனார்

92) பதினெண் மேற்கணக்கு என்ற பெயர் கொண்ட நூல் எது?

A) சங்க இலக்கியம் B) அற இலக்கியம்

C) பக்தி இலக்கியம் D) தொல்காப்பியம்

93) வஞ்சி நெடும்பாட்டு என்ற வேறு பெயர் கொண்ட நூல் எது?

A) திருமுருகாற்றுப்படை B) பட்டினப்பாலை

C) மலைபடுகடாம் D) முல்லைப்பாட்டு

94) ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான வளையாபதி எச்சமயத்தைச் சார்ந்தது?

A) பௌத்தம் B) சைவம்

C) வைணவம் D) சமணம்

95) உலகெலாம் என்று இறைவன் அடியெடுத்துக்கொடுக்கப் பாடப்பட்ட நூல்?

A) திருவிளையாடற்புராணம் B) திருவாசகம்

C) பெரிய புராணம் D) திருவாரூர் நான்மணி மாலை

96) கண்ணி நுண் சிறுதாம்பு - என்ற அடிகளைவுடைய பாடலை இயற்றியவர்?

A) நம்மாழ்வார் B) பெரியாழ்வார்

C) திருமங்கையாழ்வார் D) மதுரகவியாழ்வார்

97) திருவிளையாடற் புராணத்தின் மதுரைக்காண்டம் எத்தனை படலங்களை உடையது?

A) 18 B) 30

C) 16 D) 13

98) வீரைப்பிள்ளைத்தமிழ் என்ற நூலை இயற்றியவர்?

A) அண்ணாமலை ரெட்டியார் B) கதிரேசஞ்செட்டியார்

C) குமரகுருபரர் D) சென்னவர்

99) வேதாரண்யபுராணம் என்ற மொழிபெயர்ப்பு நூலை எழுதியவர் யார்?

A) ந.மு வேங்கடசாமி நாட்டார் B) ஆறுமுக நாவலர்

C) பரஞ்சோதி முனிவர் D) அசலாம்பிகை அம்மையார்

100) "நீராரும் கடலுடுத்த" எனத்தொடங்கும் தமிழ்த்தாய் வாழ்த்து இடம்பெற்ற நூல்?

A) ஆனந்த மடம் B) இரகசிய வழி

C) மனோன்மணியம் D) பாரதத்தாய்

winmeen.com

# Group 4 VAO General Tamil Model Test 17 – Answer Key

| | | | | |
|---|---|---|---|---|
| 1)D | 2)A | 3)C | 4)B | 5)D |
| 6)B | 7)C | 8)D | 9)B | 10)A |
| 11)A | 12)B | 13)D | 14)D | 15)D |
| 16)C | 17)D | 18)B | 19)C | 20)C |
| 21)D | 22)B | 23)A | 24)A | 25)C |
| 26)A | 27)C | 28)B | 29)C | 30)C |
| 31)B | 32)A | 33)A | 34)C | 35)C |
| 36)B | 37)A | 38)B | 39)A | 40)A |
| 41)B | 42)D | 43)A | 44)A | 45)A |
| 46)D | 47)C | 48)A | 49)A | 50)B |
| 51)A | 52)D | 53)C | 54)D | 55)C |
| 56)B | 57)C | 58)D | 59)D | 60)D |
| 61)C | 62)C | 63)D | 64)C | 65)A |
| 66)C | 67)D | 68)D | 69)B | 70)C |
| 71)C | 72)A | 73)B | 74)B | 75)D |
| 76)C | 77)C | 78)D | 79)A | 80)B |
| 81)B | 82)D | 83)B | 84)B | 85)C |
| 86)A | 87)C | 88)C | 89)D | 90)B |
| 91)C | 92)A | 93)B | 94)D | 95)C |
| 96)D | 97)A | 98)A | 99)C | 100)C |